வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 25.9.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா மீதான நம்பிக்கை உலகம் முழுவதிலும் அதிகரித்து இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்

மேக் இன் இண்டியா திட்டம் இன்று 10 ஆண்டுகளை பூர்த்தி செய்திருப்பதை பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மகாராஷ்டிராவிற்கு பயணம் மேற்கொள்கிறார். மொத்தம் 22 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடக்கி வைக்கிறார்.

புதுச்சேரியில் அனைத்து நகர மற்றும் கிராமப் பகுதிகளிலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளை, தீவிரப்படுத்துமாறு, முதலமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

மோடி-சோனிபட்

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா மீதான நம்பிக்கை உலகம் முழுவதிலும் அதிகரித்து இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று அரியானா மாநிலம் சோனிபட் மாவட்டத்தில் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் ஊழல் உள்ளிட்ட பிரச்சனைகளில் இருந்து இந்தியா விடுபட்டு வேகமாக முன்னேறி வருவதை உலகம் நன்கு உணர்ந்துள்ளதாக கூறினார். வரவிருக்கும் காலங்களிலும் மிக வேகமாக வளரும் நாடாக இந்தியா நீடிக்கும் என்பதை உலகம் புரிந்து கொண்டுள்ளதாகவும் உலகெங்கிலும் இருந்து பல பெரிய நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய மிகுந்த ஆர்வம் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டில் தொழில் மையம் அதிகரிக்கும் போது ஏழைகள்,

விவசாயிகள் மற்றும் அட்டவணைப் பிரிவினர் அதிகமாக பயன் பெறுவார்கள் என்றும் அவர் கூறினார்.

அரியானாவில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் வகையில் பல தொழில் நகரங்களை அமைக்க பிஜேபி அறிவிப்பு வெளியிட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். ஒலிம்பிக் மற்றும் பாரா லிம்பிக்ஸ் போட்டிகளில் இந்தியாவின் சிறப்பான செயல்பாடுகளில் அரியானாவைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் முக்கிய பங்காற்றி வருவதாகவும், 2036-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்த, அரசு இயன்ற எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதால் அரியானாவைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் இளைஞர்களுக்கு பல வாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் கூறினார். நாட்டின் 3-ஆவது விளையாட்டு பல்கலைக்கழகம், அரியானா மாநிலம் சோனிபட்டில் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வரும்போதெல்லாம், ஊழல், மற்றும், வேண்டியவர்களுக்கு சலுகை காட்டும் போக்கையே, போற்றி வளர்த்திருப்பதாக திரு நரேந்திர மோடி கூறினார். இடஒதுக்கீட்டிற்கு எதிரான உணர்வு காங்கிரஸ் கட்சியின் மரபணுவிலேயே இருப்பதால், காங்கிரஸ் கட்சியின் இடஒதுக்கீட்டு எதிர்ப்பு தந்திரங்கள் குறித்து மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## மோடி-மேக் இன் இண்டியா

மேக் இன் இண்டியா திட்டம் இன்று 10 ஆண்டுகளை பூர்த்தி செய்திருப்பதை பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார். இந்தியாவை, உலக அளவிலான உற்பத்தி மற்றும் புதுமையாக்க சக்தியாக மேம்படுத்துவதற்கான 140 கோடி இந்தியர்களின் மன உறுதியை வெளிப்படுத்தும் வகையில் இத்திட்டம் அமைந்திருப்பதாக சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார். இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தினால், பல்வேறு துறைகளில் உற்பத்தி வசதிகளும் ஏற்றுமதியும் எப்படியெல்லாம் அதிகரித்து, பொருளாதாரம் வலுவடைந்துள்ளது என்பது, கவனிக்க தக்கது என்றும், இதற்கு காரணமான அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் கூறி உள்ளார். மேக் இன் இண்டியா திட்டத்தை சாத்தியமான எல்லா வகையிலும் ஊக்குவிக்க அரசு உறுதி பூண்டுள்ளதாகவும், சுயசார்புடன் கூடிய முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் கூட்டு

முயற்சியில், இந்தியாவின் சீர்திருத்தப் பணிகள் தொடரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*நூறு நாள்-ரிஜிஜு*

வக்ஃபு திருத்த மசோதாவை மறு ஆய்வு செய்வதற்கான கூட்டு நாடாளுமன்றக் குழு சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினருடன் விரிவான ஆலோசனைகளை மேற்கொண்டு வருவதாகவும், இக்குழுவினர் தங்களின் அறிக்கையை, நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரின் முதல் வாரத்தில் சமர்ப்பிக்க கூடும் என்றும், மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறி உள்ளார். இக்குழுவிற்கு இதுவரை, 1 கோடிக்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தமது அமைச்சகத்தின் முதல் 100 நாள் சாதனைகள் குறித்து இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அனைத்து சிறுபான்மையினரின் நலன்கள் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் கூடுதல் வாய்ப்புக்களை வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார். சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த கைவினைக் கலைஞர்கள் தங்களின் கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறி தயாரிப்புகளை சந்தைப் படுத்த ஏதுவாக அமைச்சகம் இவ்வாண்டு டெல்லியில் லோக் சம்வர்தன் விழா நடத்தி இருப்பதாக அவர் கூறினார். நடப்பு நிதியாண்டில், அரசு, சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் பயனாளிகளுக்கு, சுமார் ஆயிரம் கோடி ரூபாய் கடன் உதவி வழங்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். ஹஜ் பயணிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்க ஹஜ் சுவிதா மொபைல் செயலி தொடக்கப்பட்டுள்ளதை அமைச்சர் சுட்டிக் காட்டினார். இந்தியாவில் இருந்து ஆண்டு தோறும் சுமார் 1 லட்சத்து 75 ஆயிரம் பேர், மெக்காவிற்கு பயணம் மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

*நூறு நாள்-துறைமுகம்*

மகாராஷ்டிர மாநிலம் வாதவான், கிரேட் நிகோபார் தீவுகளின் கேலேத்தியா விரிகுடா ஆகிய இடங்களில், 2 பெரிய துறைமுகங்கள் கட்டப்பட்டு வருவதாக மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறி உள்ளார். இதையும் சேர்த்து இந்திய அரசின் அதிகார எல்லைப் பகுதியில் உள்ள பெரிய துறைமுகங்களின் எண்ணிக்கை 14-ஆக அதிகரித்து

இருப்பதாக அவர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். தமது அமைச்சகத்தின் முதல் 100 நாள் சாதனைகளை எடுத்துக் கூறிய அவர், சரக்கு பெட்டகங்களை கையாள்வதற்கான நாட்டின் திறன் அடுத்த 5 ஆண்டுகளில் 2 மடங்காக அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

*மோடி-மகாராஷ்டிரா*

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மகாராஷ்டிராவிற்கு பயணம் மேற்கொள்கிறார். இப்பயணத்தின் போது மொத்தம் 22 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை அவர் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். புனேயில் மாவட்ட நீதிமன்றம் முதல், ஸ்வர்கேட் வரையிலான மெட்ரோ ரயிலையும் அவர் கொடி அசைத்து தொடக்கி வைக்கிறார். தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் இயக்கத்தின் கீழ் மொத்தம் 130 கோடி ரூபாய் செலவில், முற்றிலும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு, புனே, டெல்லி மற்றும் கொல்கத்தாவில் நிறுவப்பட்டுள்ள 3 பரம் ருத்ரா சூப்பர் கம்ப்யூட்டர்களை பிரதமர் நாளை நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார். வானிலை ஆராய்ச்சிக்கான உயர் திறன் கம்ப்யூட்டர் வசதிகளையும் பிரதமர் தொடக்கி வைக்கிறார். 850 கோடி ரூபாய் முதலீட்டிலான இத்திட்டம் வானிலை ஆராய்ச்சிக்குத் தேவையான இந்தியாவின் கணிப்பொறித் திறன்களில், முக்கிய முன்னேற்றமாக அமைந்துள்ளது.

*சட்ட விரோத வர்த்தகம்*

கடத்தல் பொருட்கள் மற்றும் போலி தயாரிப்புகளின் சட்ட விரோத விற்பனையை, திறம்பட்ட, சிறந்த நடைமுறைகள் மூலம் தடுக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய உணவு பதப்படுத்தும் தொழில் துறை இணை அமைச்சர் திரு ரவ்நீத் சிங் பிட்டு வலியுறுத்தி உள்ளார். புதுடெல்லியில் இன்று இதுதொடர்பான ஃபிக்கி தொழில்-வர்த்தக கூட்டமைப்பின் MASCRADE மாநாட்டில் உரையாற்றிய அவர் கடத்தல் பொருட்கள் மற்றும் போலி தயாரிப்புகளின் சட்ட விரோத விற்பனையை தடுக்க, மத்திய- மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். கடத்தல் பொருட்கள் மற்றும் போலி தயாரிப்புகளால் நுகர்வோருக்கு ஏற்படும் ஆபத்துக்கள் குறித்து விழிப்புணர்வை அதிகரிக்க ஃபிக்கி தொழில்-வர்த்தக கூட்டமைப்பு, CASCADE என்ற பெயரில் கமிட்டி ஒன்றை அமைத்து உள்ளது.

*புதுச்சேரி-டெங்கு*

புதுச்சேரியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். யூனியன் பிரதேசத்தின் அனைத்து 4 பகுதிகளிலும் மொத்தம் 70 ஆயிரம் வீடுகளில் கொசு மருந்து அடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் இக்கூட்டத்தில் தெரிவித்துள்ளனர். அனைத்து கண்காணிப்பு மருத்துவமனைகளிலும் போதிய மருந்து, ரத்தம், மற்றும், கொசு வலைகளுடன் டெங்கு வார்டுகள் தயாராக உள்ளதாகவும், போதிய எண்ணிக்கையில் என் எஸ்-ஒன் பரிசோதனைக் கருவிகள் கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துகள் மூலம் லார்வா எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள, புகை இயந்திரம் மற்றும் பூச்சிக் கொல்லிகள் வழங்கப்பட்டுள்ளன.

புதுச்சேரியில் அனைத்து நகர மற்றும் கிராமப் பகுதிகளிலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளை, தீவிரப்படுத்துமாறு, முதலமைச்சர் இக்கூட்டத்தில் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களால் குறிப்பிடப்படும் இடங்களில், கொசு மருந்து மற்றும் புகை அடிக்கும் பணிகளை உள்ளாட்சி துறை மற்றும் சுகாதாரத் துறையினர் மேற்கொள்ள வேண்டுமென்றும், மழைக்காலத்திற்கு முன்பாகவே முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியம் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

சுகாதாரத் துறை செயலர் திரு ராஜு, மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன், நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்களும், பொதுப் பணித் துறை உட்பட சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளின் அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

*அப்துல் ரஹ்மான்*

புதுச்சேரியில் மூத்த பத்திரிக்கையாளர் அப்துல் ரஹ்மான் மறைவு குறித்து துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். அயராது உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு மூலம் புதுச்சேரி பத்திரிக்கை துறையில் தனக்கென தனி அடையாளம் பதித்தவர் அப்துல் ரஹ்மான் என்றும், அவரது மறைவு பத்திரிக்கை துறைக்கு பேரிழப்பாகும் என்றும் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தமது இரங்கல் செய்தியில் கூறி உள்ளார். முதலமைச்சர்

திரு ரங்கசாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் பத்திரிக்கையாளர்களுக்கு முன் மாதிரியாக திகழ்ந்த அப்துல் ரஹ்மான் மறைவு ஊடகத் துறைக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும் என்று கூறி உள்ளார். ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு சாய் சரவணன் குமார் உள்ளிட்டவர்களும், அப்துல் ரஹ்மான் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளனர்.

வேல□ வாய்ப்பின்மை

2023-24-ஆம் ஆண்டில் தேசிய அளவிலான சராசரி வேலை வாய்ப்பின்மை விகிதம், 3.2 சதவிகிதமாக, கணிசமான அளவில் குறைந்துள்ளது. இது அதற்கு முந்தைய ஆண்டில் 5.1 சதவிகிதமாக இருந்தது. இந்த ஓராண்டு காலத்தில் குறிப்பாக அரியானா, தமிழ்நாடு, சட்டீஸ்கர் மற்றும் மத்திய பிரதேசத்தில் வேலை வாய்ப்பின்மை விகிதம் அதிக அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒட்டு மொத்தமான இந்த முன்னேற்றத்திற்கு இடையிலும் கோவா, கேரளா உள்ளிட்ட சில மாநிலங்களில் வேலை வாய்ப்பின்மை விகிதம் அதிகமாகவே நீடிப்பதாக மத்திய தொழிலாளர் சக்தி பற்றிய, மத்திய தொழிலாளர் துறை அமைச்சகத்தின் வருடாந்திர கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.

கோயல்

இந்தியாவிற்கும், ஆஸ்திரேலியாவிற்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக உடன்பாட்டினால், இருதரப்பு வர்த்தகம் கணிசமாக அதிகரித்து இருப்பதாகவும், இந்த உடன்பாட்டை, விரிவான பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாடு மூலம் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறி உள்ளார். வர்த்தகத்தை மேலும் பெருக்குவதற்கான அலுவலகம் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் அமைக்கப்படும் என அவர் இன்று அடிலெய்டில் கூட்டு செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார். தேசிய தொழில் நெடும்பாதை மேம்பாட்டுக் கழகம், ஏற்றுமதி கடன் உத்தரவாதக் கழகம், இன்வெஸ்ட் இந்தியா உள்ளிட்ட அமைப்புகளில் பிரதிநிதிகள் அடங்கிய இந்த அலுவலகம், முதலீட்டாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் இடையிலான பாலமாகச் செயல்படும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டம் பெரிய அளவில் வெற்றி பெற்றுதை அமைச்சர் சுட்டிக் காட்டினார். இதனால் இந்தியாவின்

ஸ்டார்ட்-அப் சூழலும் உற்பத்தி பணிகளும் ஊக்கம் பெற்றுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

நீதிமன்றம்

பெண் வெறுப்புக் கருத்துக்கள் மற்றும் எந்த ஒரு சமூகத்திற்கும் எதிரான கருத்துக்களை நீதிபதிகள் தவிர்க்க வேண்டும் என உச்சநீதிமன்றம் கூறி உள்ளது. கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துக்கள் சமூக ஊடகத்தில் வைரலாகி வருவது குறித்து உச்சநீதிமன்றம் இன்று தானாகவே முன் வந்து மேற்கொண்ட விசாரணைகளின் போது இவ்வாறு எச்சரித்தது. நீதிமன்ற நடைமுறைகள் பற்றிய செய்திகள் விரிவாக வெளியிடப்படும் இன்றைய மின்னணு ஊடக யுகத்தில் நீதிபதிகள் தங்களின் கருத்துக்களை வெளியிடுவதில் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வது மிக அவசியம் என்று தலைமை நீதிபதி திரு சந்திரசூட் உட்பட 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வு கூறியது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா மீதான நம்பிக்கை உலகம் முழுவதிலும் அதிகரித்து இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்

மேக் இன் இண்டியா திட்டம் இன்று 10 ஆண்டுகளை பூர்த்தி செய்திருப்பதை பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மகாராஷ்டிராவிற்கு பயணம் மேற்கொள்கிறார். மொத்தம் 22 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடக்கி வைக்கிறார்.

புதுச்சேரியில் அனைத்து நகர மற்றும் கிராமப் பகுதிகளிலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளை, தீவிரப்படுத்துமாறு, முதலமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

---------------------------------